

தட்டாஞ்சாவடி கழக வேட்பாளர் சேது செல்வத்தை ஆதரித்து தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம் வாக்கு சேகரித்தார். வேட்பாளர் சேது செல்வம், கோயம்பேடு ஆடியோ சுரேஷ், நெல்லை சத்யா, பெரம்பூர் முருகன், கொளத்தூர் தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட நிர்வாகிகள் இதில் பங்கேற்றனர்.

தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் - கோ.சி.வள்ளுவன் தலைமை - மதுராந்தகம் தொகுதியில்

மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் வாக்கு சேகரிப்பு!

சங்கப் பொதுச் செயலாளர் த.சரவணகுமார் அறிக்கை!

மதுராந்தகம், அக். 01
மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கப் பொதுச் செயலாளர் த. சரவணகுமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

06.10.2026 அன்று நடைபெறவுள்ள மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆசியுடன், மதச்சார்பற்ற முற்போக்கு கட்சிகளின் சார்பில்



போட்டியிடும் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து அச்சரப்பாக்கம் தெற்கு ஒன்றியம், கடமலைபுத்தூர் ஊராட்சி பகுதியில் தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவைத் தலைவர் கி.நடராசன், பொருளாளர் கோ.சி.வள்ளுவன் ஆகியோர் தலைமையில் வாக்கு சேகரிக்கும் பணி நாளை (02.10.2026 வெள்ளிக்கிழமை) காலை 07.00 மணியளவில் நடைபெற வுள்ளது.

இதில் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத்தின் தலைமை சங்க நிர்வாகிகள், பணிமனை செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் மற்றும் செயல் வீரர்கள் பெருந்திரளாக வாக்கு சேகரிப்பில் ஈடுபடுமாறு தலைமை சங்கத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கப் பொதுச் செயலாளர் த.சரவணகுமார் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமை! துறைமுகம் மேற்கு

57 வது வட்டச் செயலாளர் ஜி.ராமமூர்த்தி இல்லத் திருமண வரவேற்பு விழா!

மேயர் பிரியா ராஜன் - தயாநிதி மாறன் எம்.பி. பங்கேற்பு!

சென்னை, அக். 01
சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி, 57 வது வட்டக் கழகச் செயலாளர் ஜி.ராமமூர்த்தி (நினைவில் வாழும்) ஆர். மகா ஆகியோரின் புதல்வர் ரா.கவியரசனுக்கும், சென்னை, என்.காளிதாஸ்



(நினைவில் வாழும்) கே.சசிகலா ஆகியோரின் புதல்வி கா.சங்கீதாவிற்கும் திருமண வரவேற்பு விழா இன்று (01.10.2026 வியாழக் கிழமை) மாலை 6.30 மணிய ளவில், சென்னை, வால் டாக்ஸ் ரோடு, முதல்வர் திருமண மாளிகையில் நடை பெறுகிறது.

திருமண வரவேற்பு விழா விற்கு சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., மேயர் பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர் மற்றும் இரா.நரேந்திரன், பி.ஸ்ரீராமுலு, எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், இசட்.ஆசாத், என்.பி.எம்.சேக் அப்துல்லா, பா.ஜெகதீஷ், ஏ.பி.எஸ்.செந்தில் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கோ.ஏகப்பன், புனிதவதி எத்திராசன், தேவஜவகர், எம்.இப்ராஹிம் கனி, ஆர்.கலைச்செல்வி, பி. விஜயகுமார், நா.ரஞ்சித் விஜயாலயன், எம்.விநாயகம், க.பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், ஆர்.மாரி, பி.கர்ணா, டி.கே.கலைவாணன், மா.ஜெய்சங்கர், ஆர்.ரவிச்சந்திரன், பா.கதிரவன், பா.அண்ணாதுரை, சேப் பாக்கம் வே.பா.பிரபாகரன், டி.சத்ஷ்குமார், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், டி.ராஜா (எ) கதிரவன், ம.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், மே.ஜனார்த்தனன், கே.ஆர்.அப்ரஞ்சி, மா.முத்துக்குமார், நா.சுந்தரம், எஸ்.சந்தியாகு, வி.சந்தனாலட்சுமி, சி.பா.ஜெயராமன், வானவில் விஜய், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர் ஜி.சாந்தகுமாரி, நா.துலுக்காணம், பி.உதயசங்கர், புரசை ஜி.தாமோதரன், எல்.பி.எப்.மோகன், டி.பெரோஸ்கான், ஆர்.எஸ்.சித்திக், வி.பரிமளம், ரங்கீலா ராஜேஷ் ஜெயின், எல்.தாஹாநவீன், டி.எஸ்.சேகர் மற்றும் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்து கின்றனர்.

ஜி.எஸ்.தமிழரசன், எம்.கண்ணன், எம்.சுதாகர், எம்.தினேஷ், ஆர்.பிரபு, வி.சச்சின், எம்.வல்லரசு, என்.ஸ்ரீகாந்த் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு கழகத்தின் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து, பாகம் 141 ல் ஒதுக்கப்பட்டுள்ள, செம்பூண்டி ஊராட்சியில் சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் மீ.வே. கருணாகரன் தலைமையில், ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பி.என். சுப்பிரமணியன்
அக்டோபர் 1 (2015)



1956ஆம் ஆண்டில் கழக உறுப்பினராகி கழகப் பணியாற்ற துவங்கினார்.

25 ஆண்டுகள் தொடர்ந்து ஆற்காடு நகரச் செயலாளராகவும், 8 ஆண்டுகள் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர். அத்தோடு, பத்து ஆண்டுகள் தலைமை தணிக்கைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

1996ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்கத்தின் செந்தமிழ்க் கலைச்செம்மல் சிவாஜி கணேசன் பிறந்தநாள் திரையுலகம் சிறந்தநாள்!

ராதனப் போக்குகள்
போயொழியத் திரையுலகில்
திராவிட இயக்கமன்று
சீர்திருத்தம் பகுத்தறிவு
பராவிடக் கருத்துகளைப்
படங்களில் பரப்பிடச்
சராசரி மக்களின்
தமிழ்த்தலைவர் அண்ணாவும்
இராதவர் சிந்தனையை
எழுப்பிய கலைஞரும்
வராதபல புதுமைகள்
வண்ணமுறத் தீட்டினர்
பராசக்தி அவற்றிலே
பலகனல் மூட்டிற்று
தராசக்தி நடிப்பிலே
தந்தவர் சிவாஜியாம்!

அண்ணா தீட்டிய
ஆரியச் சூழ்ச்சியைக்
கண்முன்னர் நிறுத்தியே
காட்டிய நாடகத்தில்
திண்ணிய மாவீரன்
சிவாஜி வேடத்தில்
கண்டதந்தை பெரியாரும்
களிப்புற்று, சிவாஜியென
விண்டதனால் விசிகணேசன்
விரைவாகப் புகழ் பெற்றீர்!

புதிருந்து கிளம்பிட்ட
புலிப்பாய்ச்சல் போலவே
அதிரவைத்த ஒருபடம்
அக்காலப் பராசக்தி!
குதிரையின் வேகமும்
குழகளிற்றின் பிளிறலும்
எதிரொலிக்கக் கலைஞரன்று
எழுதிய உரையாடல்
உதித்தெழும் சூரியன்போல்
உணர்ச்சிகளைத் தூண்டிடப்
புதியமுறை யில்பேசிப்
புரட்டிவிட்டார் திரையுலகை!
பதரெல்லாம் பறந்திடப்
பராசக்தி "அருளாலே"
முதலிடம் பிடித்தவர்
முடிவுவரை நடித்தவர் !

பெரியாரின் பற்றுடன்
பேரறிஞர் அண்ணாவின்
அரியதொரு தம்பியாய்
ஆற்றலுறு கலைஞரின்
உரிமைமிகு நண்பராய்
ஒருகாலம் கழகத்தின்
வரிசையில் முதலிடம்
வகித்தவராய்க் கொளகையின்
முரசமாய் விளங்கிய
முற்காலம் பலருமே
தெரியாமல் இருக்கின்றார்
திருப்பதி கணேசனென
நரிவேலை செய்துசிலர்
நகர்த்திவிட்டார் எதிர்ப்புறம்!

புரியாமல் சூழ்ச்சியே
போய்ச்சேர்ந்தார் எப்போதும்
தரிசான காங்கிரசில்!
தாங்கிய இவரைஒரு
கரியாக மட்டுமே
கருதினர் வைரத்தை!
அரியணை மட்டுமே
அவர்களின் குறியாக
மரியாதை கலைஞர்க்கு
மண்ணுக்கும் இல்லையங்கு!
பெரியவர் காமராசர்
பேரன்பைப் பெற்றாலும்
உரியவை கிடைக்காமல்
ஒதுக்கவே பட்டவர்!
இருந்தாலும் காங்கிரசில்
எதிர்பார்ப்பை விட்டவர்!



அரியதொரு நடிப்பாலே
அகல்வானம் தொட்டவர்!
வரலாற்றில் நிலைக்கின்ற
வல்லமை பெற்றவர்!
குரலொன்றால் தமிழ்த்திரைக்
கொற்றத்தை ஆண்டவர்!

காங்கிரசோர் கானல்நீர்
காலமெலாம் அதன்பின்னே
தூங்காமல் ஓடியே
தொலைந்தது வாழ்வென்னும்
ஓங்கிய உண்மையை
உறுதியாய் உரைத்தவர்
நீங்கிய காலத்தே
நிகழ்த்திய உரையெலாம்
பாங்கிலாக் காங்கிரசு
பயனற்ற தென்பதுதான்!

அரசியல் , சூழ்ச்சியால்
ஆவதுதான் என்றறியும்
உரமில்லா வெள்ளைமனம்
உடையவர் ஆதலால்
தரமில்லா அரசியல்
தமக்கொத்து வாராதென்று
ஒருநாளில் முடிவுசெய்து
ஒதுங்கினார் ஆனாலும்
வருநாளில் கலைஞருடன்
வாஞ்சையாய் இருந்தவர்!
திருவாகத் திகழுமிந்தச்
செந்தமிழ் நாடென்றவர்!

பேராசிரியர்
மா.செல்வராசன்

தமிழ்த்திரை உலகிலே
சட்டென உடைகின்ற
குமிழிகள் பலரிருக்கக்
குன்றாக நெடுவரை
இமயமாய் இருப்பவர்
எட்டாத பொருப்பவர்!
சமமாக இன்றுவரை
சாற்றுதற்கு ஒருவரில்லை!

அமிழ்தான செந்தமிழை
அறிந்து அவர் பேசுகையில்
இமிழ்கடல் அலைகளும்
இடிமின்னல் தீ காற்றும்
திமிர்ந்தெழும் :இதுவொரு
திரையுலகின் மாயமன்றோ!

சிமிழல்ல.திசையெட்டும்
தெரிகின்ற சூரியன்
உமியல்ல ஒருநொடியில்
ஊதினால் பறப்பதற்கு!
சுமையல்ல நடிப்பொரு
தொழிலெனினும் தூயதவம்;
தமைவென்றார் அதனாலே
தரித்தபல வேடங்கள்
இமைவிழி புருவநெற்றி
இதழ்செவி கைகால்கள்
அமைவாக எழும்நடிப்பில்
அரசருள் வேந்தரன்றோ!

அண்ணனாய்த் தம்பியாய்
அப்பாவாய் மகனாகத்
திண்ணிய வீரனாய்த்
தியாகியாய்க் கடவுளாய்
கண்ணியக் காதலனாய்க்
கணவனாய்க் காமுகனாய்
நண்பனாய்க் காவல்துறை
நாயகனாய் வழக்குரைக்கும்
பண்பனாய் மிடுக்கான
பண்ணையாய்த் தொழிலதிபர்
எண்ணிலா மாந்தராய்
ஏற்று அவர் நடித்ததெல்லாம்
கண்ணிலா மக்களின்
கருத்துவிழி திறந்திட!
பண்ணிய ஒவ்வொன்றும்
பண்பாடு சிறந்திட!

கலையூராய்ச் சிறந்திருந்த
காலம்போய்த் தமிழ்நாடு
கொலையூராய் மாறிடும்
கொடுமைதான் அன்றாடம்!
இலையின்று. அவரைப்போல்
இலட்சிய வேடங்கள்
பல ஏற்று மக்களுக்குப்
பாடங்கள் பயிற்றிட!
இலக்கில்லாத் திரையுலகம்
இடிந்துவிழும் கோட்டையாய்
விலக்கத்தான் படுகிறது
விழுமியம் கெடுகிறது!

கட்டபொம்மன் பராசக்தி
கனலுரை மனோகரன்
ஒட்டப்பிடா ரத்துயர்
ஒப்பிலா வ உ சி
பெட்புறும் அண்ணனாய்ப்
பிறங்கிடும் பாசமலர்
நட்பினுக்கு உயிர்தரும்
நல்லவன் கருணனெனக்
கட்கினிய மாந்தராய்க்
கணக்கில ஏற்றவர்
நுட்பமாய் நடிப்பொன்றே
நோன்பாக நோற்றவர்
விற்பனம் கண்டுகண்டு
வியந்துலகம் பாராட்டத்
திட்பமாய் என்றென்றும்
திகழுவார் சிவாஜி!

கோடிகோடி கொடுத்தாலும்
கொடைவள்ளல் பட்டமொன்றை
நாடியதில்லை ; வள்ளலே
நன்றாக வாழ்கவென்று
பாடினார் பாவேந்தர்
பாராட்டு வேறெதற்கு?

எத்தனை காலங்கள்
என்றாலும் திரையுலகின்
அத்தனாய் முத்தனாய்
ஆள்கின்ற வேந்தனாய்
நித்தமும் விளங்குவார்
நீள்புகழ் கொள்ளுவார்
உத்தமச் செல்வனாய்
உயர்பெருங் கலைஞனாய்ப்
புத்தமுது போலவே
புதுப்புதுப் பூப்போல
வித்தக நடிப்பிலே
வெளிப்படுத்திக் காட்டிய
சித்தனை என்றென்றும்
செம்மாந்த தமிழனை
நத்தாமல் நத்திடும்
நடிகருள் திலகத்தின்
முத்தான பிறந்தநாள்
முத்தமிழ் சிறந்தநாள்
கொத்துமலர்ப் பூக்களால்
கொண்டாடிப் போற்றுவோம்;
இத்தரை மீதெங்கும்
இசைபாடி ஏற்றுவோம்!



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து சோழிங்கநல்லூர் மத்திய பகுதிக்கு ஒதுக்கப்பட்ட மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் பிலாப்பூர் ஊராட்சியில் பாகம் எண்.27 ல் கழக அரசின் சாதனைகளையும், தற்போது உள்ள த.வெ.க அரசின் அவலங்களையும் சோழிங்கநல்லூர் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்தரமேஷ் எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்வில், வட்ட கழக செயலாளர் எப்.ஆரோன் (எ) அரசு, பி.எஸ்.ஆறுமுகம், மதுராந்தகம் வடக்கு ஒன்றிய பொருளாளர் எஸ்.தேவராஜ், மற்றும் பெருமாள், செல்வகுமார் பிலாப்பூர் கிளை செயலாளர் ஜெ.பழனி, மற்றும்.திருமலை உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் உடனிருந்தனர்.